**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**Probate O.P.No.121/2024**

PW - 1

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் திங்கட்கிழமை அன்று திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | இ.இந்திராணி |
| கணவர் / தந்தை பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் அசல் மனுவில் 2 ஆம் மனுதாரர் ஆவேன். 1 ஆம் மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன்,. ம.சா.1 ஆக எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாகத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேலும் எனது சாட்சியத்தை உறுதிபடுத்துவதற்காக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 22-09-2018 தேதியிட்ட உயிலின் அசல் ம.சா.ஆ.1.

2. 17-10-2023 தேதியிட்ட சிறப்பு அதிகாரப் பத்திரத்தின் அசல் ம.சா.ஆ.2.

3, 28-01-2016 தேதியிட்ட 1 ஆம் மனுதாரரின் கடவுச்சீட்டின் நகல் ம.சா.ஆ.3.

4. என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.4 ஆக குறியிடப்படுகிறது.

5. 22-03-1937 தேதியிட்ட என் குழந்தையப்பன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் ம.சா.ஆ.5.

6. 12-07-1968 தேதியிட்ட கருப்பக்காள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் ம.சா.ஆ.6.

7. 29-11-1973 தேதியிட்ட கருப்பக்காள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7.

8. 05-07-2023 தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட குழந்தையப்பனின் இறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.8.

9. 07-09-2023 தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.9.



10. பதிவிறக்கம் செய்யப்பட்மட அரசு வழிகாட்டி மதிப்பின் அசல் ம.சா.ஆ.10.

11. 02-06-1992 தேதியிட்ட கருப்பக்காளின் இறப்புச் சான்றிதழின் அசல் ம.சா.ஆ.11.

12. 08-03-1993 தேதியிட்ட கருப்பக்காளின் வாரிசு சான்றிதழின் அசல் ம.சா.ஆ.12.

(1 முதல் 7 எதிர்மனுதாரர்களின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது)

Digitally signed by VIJAYA
Date: 2025.04.28 19:31:49
+05'30'